# அனகாபுத்தூர் நகராட்சி

**<u>சென்னை – 600 070.</u>**

<u>கூட்ட எண்.38/2018</u> <u>நாள். 31.12.2018</u>

## <u>தனி அலுவலர் அவர்களின் டிசம்பர் 2018 மாதம் சாதாரணக் கூட்டப்பொருள்</u>

31.12.2018ம் நாள் திங்கள்கிழமை மாலை 4.30 மணியளவில் அனகாபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில், அனகாபுத்தூர் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நடத்தப்பெறும் சாதாரண கூட்டப் பொருள் .

**<u>பொருள் எண். 1</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் டிசம்பர் 2018 மாதத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு / இறப்பு / மற்றும் இறந்து பிறந்தவைகள் குறித்த விவரம்

<u>பிறப்பு / இறப்பு / இறந்து பிறந்தவைகள்</u>

| வ. எண். | மாதம் | பிறப்பு | | இறப்பு | | இறந்து பிறந்தவைகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | டிசம்பர் 2018 | 4 | 2 | 1 | 3 | இல்லை | இல்லை |

**<u>பொருள் எண். 2</u>**

ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2018 மாதத்தின் நாட் குறிப்புகள்

**<u>அலுவலக குறிப்பு :</u>** கூட்டத்தில் பதிவு செய்யலாம்.

**<u>பொருள் எண். 3</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி பணி (IUDM) 2018–19) மூன்றாவது திட்டத்தின் ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம் நாள்19.12.2018ல் (Minutes of the third Project Sanctioning and Monitoring Committee meeting IUDM 2018-19 held on 19.12.2018) கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி பணி (IUDM) 2018–19 (ரூ. இலட்சத்தில்) | நகராட்சி பங்களிப்பு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1. | அன்னை குடியிருப்பு மற்றும் பாரி நகர் முதல் காமாட்சி நகர் 5வது தெரு வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 60.00 | 57.00 | 3.00 |
| 2. | பாலாஜி நகர் 3 வது பிரதான சாலை முதல் ராகவேந்திரா கோயில் வரை மழைநீர் கால்வாய் அமைத்தல் பணி | 60.00 | 57.00 | 3.00 |
| | **மொத்தம்** | **120.00** | **114.00** | **6.00** |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பார்வையிட்டு அனுமதியளிக்கலாம்.

2.உரிய வழிமுறை பின்பற்றி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.4**

06.12.2018 மற்றும் 28.12.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | சமுதாய நலக்கூடம் உள்புறத்தில் பேவர் பிளாக் அமைத்தல் பணி | 5.50 | ஏ.சிவா<br>ஆர்.செந்தில் குமார் | 0.15 %குறைவு<br>1.25 %அதிகம் |
| 2. | அம்மா உணவகத்தில் சிசிடிவி கேமரா பொருத்ததுல் பணி | 0.60 | 1 ஜிபிபிஎஸ் ஐடி சொலுசியன்ஸ்<br>டி.ஜே. எண்டர்பிரைசஸ் | 0.10% குறைவு<br>1.50 %அதிகம் |
| 3. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஏசிகளுக்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 0.80 | பிக் பாக்ஸ் இன்ஜீனியரிங் பிரைவேட் லிமிடெட்<br>சிம்லா கூல் மேக்கர்ஸ் | 0.10% குறைவு<br>1.30 %அதிகம் |
| 4. | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 43 எண்ணிக்கையிலான உயர் கோபுர விளக்கினை ஒரு வருட காலத்திற்கு பழுது பார்த்து பராமரித்தல் பணி | 9.00 | லஷ்மி எண்டர்பிரைசஸ்<br>மகாலஷ்மி எண்டர்பிரைசஸ் | 0.05% குறைவு<br>1.61 %அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | பசுமை உரக்குடில் 2ல் பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல் பணி | 3.20 | டி.கே.இன்டஸ்டிரியல் வி.குணாளன் | 0.05% குறைவு 1.23 %அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.5**

14.11.2018ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | Removal of legacy waste of 27000 cu.m through Bio Mining process to Reclaim the existing dump yard located at Anakaputhur EB colony in Anakaputhur Municipality on Design, Build, Own and Operate (DBOO) Concept | 178.00 | மெசஸ்.ஹர்ஷிதா அசோசியேட்ஸ்<br><br>மெசஸ்.ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் பிரைவேட் லிட் | 1.41 %குறைவு<br><br>8.14 %அதிகம் |
| | | | | |

**அலுவலகக்குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. திட்ட பணி என்பதால் பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.6**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பசுமை உரக்குடில் 2ற்கு அருகாமையில் வாகனங்கள் நிறுத்தும் கூடம் மற்றும் பழுது பார்க்கும் பணிமனை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்கண்ட பணியினை தூய்மை இந்தியா திட்டம் 2018–19 அல்லது நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.7</u>**

அனகாபுத்தூர் நகராட்சிப் பகுதிகளில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதாலும், நகரில் ஆங்காங்கே ஈக்கள் அதிகமாக உள்ளதாலும், நகராட்சி குப்பை கொட்டும் இடத்தில் துர்நாற்றம் வீசுவதாலும், அவைகளை கட்டுப்படுத்தி கிருமி நாசினி தெளிக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும், அம்மா உணவகம் உள்ளிட்ட நகரின் முக்கிய பகுதிகளில் ஈக்களின் தொல்லையை கட்டுப்படுத்தவும் சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுவதை உறுதிப் படுத்தவும் நடவடிக்கை வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவுக்கு லெமன் கிராஸ் எனும் கிருமி நாசினித் திரவம் 100 லிட்டர் தகுதியான நிறுவனங்களிடமிருந்து வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவு ரூ.2.80 இலட்சம் ஆகும்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.8</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொது நிதியில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அம்மா உணவகம் அருகில் ஆதார் மையம் மற்றும் சமுதாய நலக்கூடத்திற்கு நாற்காலி, மணமகன் மற்றும் மணமகள் அறைக்கு பீரோ, கட்டில் உணவு கூடத்திற்கு மின் விசிறி பொருத்தும் பணி | 5.00 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.1 முதல் 9 வரை) | 9.80 |
| 3. | அனகாபுத்தூர் நகராட்சி காமராஜபுரத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.10 முதல் 18 வரை) | 9.80 |

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.9</u>**

அனகாபுத்தூர் நகராட்சிக்கு பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19ன் கீழ், வார்டு எண்.10 மற்றும் வார்டு எண்.16ல் ஆழ்துளை கிணற்றுடன் 1000 LPH RO PLANTஅமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.1162/2018/அ3 நாள்.09.12.18ன்படி நிர்வாக அனுமதி வழங்கி

உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு இவ்வலுவலக ந.க.எண்.1176/2018/இ1 நாள்.31.10.2018ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 | | | | |
| 1 | வார்டு எண்.16ல்ஆழ்துளை கிணற்றுடன் 1000 LPH RO PLANTஅமைத்தல் | 7.50 | ஒசோன் டெக்னாலஜிஸ் ஹைடெக் ஸ்வீட் வாட்டர் டெக்னாலஜிஸ் (பி) லிட் | 0.10 % குறைவு<br>1.50 % அதிகம் |
| 2 | வார்டு எண்.10ல்ஆழ்துளை கிணற்றுடன் 1000 LPH RO PLANTஅமைத்தல் | 7.50 | ஒசோன் டெக்னாலஜிஸ் ஹைடெக் ஸ்வீட் வாட்டர் டெக்னாலஜிஸ் (பி) லிட் | 0.10 % குறைவு<br>1.50 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :** நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் பார்வையிட்டு அனுமதியளிக்கலாம்.
2. குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**<u>பொருள் எண்.10</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு புகை மருந்து தெளிப்பான் குறைவாக உள்ளதால், 12 லிட்டர் பெரிய புகை மருந்து தெளிப்பான் 7 எண்ணம் வாங்கவும், அதற்கான தோராய செலவினம் ரூ.1.00/–இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.11</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள மூன்று சக்கர மிதிவண்டிகளில் பழுது ஏற்பட்டு பயன்படுத்தாத நிலையில் உள்ளது. இவற்றின் தோராய சந்தை மதிப்பு ரூ.9000/– ஆகும். மேற்படி உபயோகமற்ற மிதிவண்டிகளை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.
**2.**உரிய வழிமுறை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.12</u>**

அனகாபுத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள 230 எண்ணிக்கை சிறு மின்விசை பம்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சிறு மின்விசை பம்புகள் பழுது ஏற்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டதில், 53 எண்ணிக்கையிலான சிறு மின் விசை பம்பு மற்றும் 50 சாட்டர் முற்றிலும் பழுது ஏற்பட்டு உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்படி உபயோகப்படுத்த முடியாத பொருட்களின் தோராய சந்தை மதிப்பு ரூ.12500/— ஆகும். மேற்படி உபயோகமற்ற பொருட்களை பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.
**2.**உரிய வழிமுறை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.13</u>**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பபட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் பொது நிதியில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அனகாபுத்தூர் நகராட்சி பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.1 முதல் 9 வரை) | 9.50 |
| 2. | அனகாபுத்தூர் நகராட்சி பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் பணி (வார்டு எண்.10 முதல் 18 வரை) | 9.50 |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.14</u>**

அனகாபுத்தூர் நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 9 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி ரூ.9.90 இலட்சத்திற்கு மெசஸ்.ராஜலட்சுமி காண்ட்ரக்ஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே பழைய பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்பு அதிகளவில் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் குடிநீர் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் அவசர அவசியத்தை

கருத்தில் மேற்கண்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் குடிநீர் திட்ட பணி தொடர்ந்து நடைபெருவதால் இதே ஒப்பந்தத்தில் பழுது பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்ய கூடுதல் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2.திட்ட பணியின் மூலம் பகிர்மான குழாய் அமைக்கும் போது எதிர்பாரதவிதமாக ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் கூடுதல் தொகை ரூ.3.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

<u>**பொருள் எண்.15**</u>

அனகாபுத்தூர் நகராட்சியில் வார்டு எண்.10 முதல் 18 வரை உள்ள குடிநீர் குழாய், வீட்டு இணைப்புகள் , பொது குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுது நீக்கம் செய்தல் பணி ரூ.9.90 இலட்சத்திற்கு மெசஸ்.ராஜலட்சுமி காண்ட்ரக்ஸ் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது இந்நகராட்சியில் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே பழைய பிரதான குழாய், பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் இணைப்பு அதிகளவில் பழுது ஏற்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் குடிசீர் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் அவசர அவசியத்தை கருத்தில் மேற்கண்ட பணிகளை உடனுக்குடன் செய்து முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் காரணமாக மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் குடிநீர் திட்ட பணி தொடர்ந்து நடைபெருவதால் இதே ஒப்பந்தத்தில் பழுது பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு நல்ல முறையில் குடிநீ விநியோகம் செய்ய கூடுதல் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

2. திட்ட பணியின் மூலம் பகிர்மான குழாய் அமைக்கும் போது எதிர்பாரதவிதமாக ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருதி ஏற்கனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை

விகிதத்தில் கூடுதல் தொகை ரூ.3.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.16**

அனகாபுத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் சொத்து வரி , குடிநீர் வரி , தொழில் வரி , கடை வாடகை , D&O லைசன்ஸ் மற்றும் குத்தகை வரி போன்ற வரி இனங்களை நிலுவையின்றி உடனடியாக செலுத்தக்கோரி அறிவிப்பு செய்யவும் வாடகை அடிப்படையில் ஆட்டோ(ஓட்டுநர் ஊதியம், எரிபொருள், ஒலிபெருக்கி மற்றும் ஆம்பிளிபையர் உட்பட) உபயோகப்படுத்த விலைப்புள்ளி கோரவும், அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.17**

27.12.2018 அன்று நடைபெற்ற விலைப்புள்ளியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | பேன்சி ஏஜன்சி, 27, ஜவஹர் தெரு, கிருஷ்ணமூர்த்தி நகர், சென்னை 18 | ஸ்ரீவாரி எண்டர்பிரைசஸ், ஏபி–101, பி.கே.எஸ்.காம்ப்ளக்ஸ், சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை 40. | பயனீர் டூல்ஸ் (ம) ஹார்டுவேர்ஸ், 112, பாரதி நகர், திருச்சி 01. |
|---|---|---|---|---|
| | | (விலை ஒன்றுக்கு) | | |
| 1. | 12 லிட்டர் பெரிய புகை மருந்து தெளிப்பான் | ரூ.14,200/– | ரூ.14,500/– | ரூ.14,350/– |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**பொருள் எண்.18**

அனகாபுத்தூர் நகராட்சி அனைத்து பிரிவுகள் மற்றும் வரிவசூல் மையத்தில் இயங்கி வந்த கணிணிகள் உயர்மின் அழுத்தம் காரணமாக கணிணிகள் பழுது ஏற்பட்டு இயங்காமல் போனது. எனவே அனைத்து பிரிவுகளில் உள்ள கணிணியின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு கணிணிகள் பழுது நீக்கம் செய்யவும், அதற்கான செலவினம் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தில் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதியளிக்கலாம்.

**<u>பொருள் எண்.19</u>**

நகராட்சி நிர்வாக ஆணையரக நகரமைப்பு பிரிவு துணை இயக்குநர் அவர்களால் அனுமதியற்ற மனைப்பிரிவு / மனைகள் வரன்முறை திட்டத்தின்கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 68 மனைபிரிவுகளில் பொதுமக்கள் அறியும் விதமாக அந்தந்த மனைப்பிரிவுகளிலேயே விளம்பரம் பேனர்கள் வைக்கப்பட்டது. விடுபட்ட மனைபிரிவுகளில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் விதமாக ஏற்கெனவே அறிவிப்பு பேனர்கள் வைத்த அதே ஒப்பந்ததாரர் மூலம் அதே விலை விகிதத்தில் பேனர் வைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

தனி அலுவலர்
அனகாபுத்தூர் நகராட்சி.